தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# தொட்டியம் மதுரகாளியம்மன் வழிபாடு

அ.ஞா. உமாமகேஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூர,திருச்சி

ஆய்வுச்சுருக்கம்

மனித வாழ்வில் நடக்கும் அனைத்து செயல்களுக்கும் மனித ஆற்றலைக் கடந்த ஏதோ ஓர் சக்தி காரணமாக அமைகின்றது. இது இயற்கை என்பதாகவும் தெய்வம் என்பதாகவும் நம்மில் இருவேறுபட்ட நம்பிக்கைகள் நிலவுகின்றன. அவ்வகையில் நல்லன கூடவும் நீயன விலகிடவும் மக்களால் கடைபிடிக்கப்பட்டதே தெய்வ வழிபாடு ஆகும். அத்தகைய தெய்வ வழிபாடு பெருந்தெய்வ வழிபாடுஇ சிறு தெய்வ வழிபாடு என இருமுறைகளில் நடைபெறுகின்றன. அதில் சிறுதெய்வ வழிபாடு குறித்தும் அதில் காளி வழிபாடான மதுரகாளியம்மன் வழிப்பாட்டை ஆய்வதே இவ்வாய்வுக்கட்டுரை ஆகும்

முன்னுரை

மனிதன் பல்வேறு அச்ச உணர்வுகளின் காரணமாக தெய்வத்தை வழிபடக்கூடிய சூழல் உருவாயிற்று அவ்வகையில் தெய்வ வழிபாடு என்பது மக்களிடையே அவசியமாகிறது. இத்தெய்வ வழிபாடானது சிறுதெய்வ வழிபாடு. பெருந்தெய்வ வழிபாடு என்ற இருநிலையிலும் திணை அடிப்படையிலும் தெய்வங்கள் பாகுபடுத்தப் பட்டுள்ளது சங்க இலக்கியங்களின் வழி புலனாகிறது. இத்தெய்வ வழிபாடு இயற்கையின் சீற்றங்கள் மூலம் நிகழ்கின்ற அச்சுறுத்தலுக்கு பயந்து இயற்கையை வழிபடக் கூடிய சூழல் உருவாயிற்று. மேலும்இ மனிதன் தன்னை தற்காத்துக்கொள்ளவும் சமய சடங்குகளை தம் வாழ்வில் நெறிமுறைப்படுத்திக் கொண்டான். அவ்வகையில; தொட்டியம் மதுரகாளியம்மன் திருக்கோவில் பற்றியும் அதன் வழிpபாட்டுமுறை பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

வழிபாடு பொருள் விளக்கம்

இறைவனை அடைவதற்கு ஒரு நன்னெறியில் செல்ல பணிப்பதே வழிபாடு ஆகிறது. வழிபாடு என்பது மதம், குலம், நாடு, இடம், குடும்பம், பழக்க வழக்கங்கள் முதலானவற்றின் அடிப்படையில் பல்வேறு வழிமுறைகளில் சங்க காலம் முதல் பின்பற்றப்படுகிறது. அவ்வகையில் மனிதர் அவரவர்கள் விருப்பப்பட்ட தெய்வங்கள் பழக்கப்பட்ட நியமநியதிகளை பின்பற்றி பூசிக்கும் முறையே வழிபாடு ஆகும். மக்கள் இயற்கையின் மீதான அச்சத்தின் காரணமாக வணங்க ஆரம்பித்த முறையே வழிபாடு ஆயிற்று. வழிபாட்டு முறைகளை புலவர் பெருமக்கள் தாம் இயற்றிய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களில் இறைவணக்கம் வழி கையாண்டுள்ளதை காணமுடிகிறது.

இவ்வழிபாடானது சங்க கால திணைப்பகுப்பு முறையுள் குறிஞ்சி, முல்லை. மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை திணைப்பாகுபாட்டிற்கு ஏற்றாற்போல் மாறுபட்டு காணப்படுகிறது. இதனையே தொல்காப்பியர்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்

-தொல்.அகத்திணையியல்

என்று கூறுவதை இந்நூற்பா மூலம் அறியவருகிறது.

சங்க இலக்கியத்தில் வழிபாடு

சங்கச் செய்யுளான பெரும்பாணாற்றுப்படையில் அணங்கு என்னும் சொல் வழிபாட்டிற்கு உரியதாக இடம்பெற்றள்ளது. மேலும் சங்க காலம் முதலே போர்களத்தில் வீரமரணம் அடைந்தவருக்கு நடுகல் வழிபாடு முறை இருந்து வருகிறது என்பதை இலக்கியங்களில் காணமுடிகிறது,

களிறு எறிந்து வீழ்ந்து எனக் கல்லே பரவினல்லது பரவும்

புறநானூறு (பா.51)

நடுகல் வழிபடு வழக்கத்தை கூறும் புறநானூறு பாடல் இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. என்பதன் மூலம் அறியமுடிகிறது நடுகல் வழிபாடே பின் நாட்களில் சிறுதெய்வ வழிபாடக மாற வழிவகுத்தது எனலாம். பழந்தமிழரின் வாழ்வியல் மற்றும்

பண்பாட்டின் அரிச்சுவடியாக அமைந்துள்ள சங்க இலக்கியத்தில் வழிபாட்டு முறைகள் என்பது பல்வேறு இடங்களில் காணப்படுகின்றது. உதாரணமாக. கொற்றவை, எமன், திருமால், சிவன் போன்ற தெய்வங்கள் வழிபாட்டில் இருந்ததை அகம் மற்றும் புறப்பாடல் வழியாக தெளிய முடிகிறது. இவ்வாறு நம் தமிழ் இலக்கியங்கள் கூறும் வழிபாட்டு முறைகளை ஆய்வறிஞர்கள் பெருந்தெய்வ வழிபாடு சிறுதெய்வ வழிபாடு என்று இருவகைகளாகப் பிரிக்கின்றனர். கிராமப்புறங்களில் வழிபடும் சிறுதெய்வங்களைப் பற்றிய வரலாறு எல்லாம் சிறந்த வாழ்வு வாழ்ந்து இறந்தவர்களையே தெய்வமாக வழிப்பட்டுவருகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

பெருந்தெய்வ வழிபாடு

பெருதெய்வ வழிபாடு பற்றிக் கூறவேண்டுமெனில் பெருந்தெய்வங்கள் பிறப்பு இறப்பு அற்றவையாக இருக்கிறது. சிவன், திருமால், பிரம்மன். முருகன் கணபதி போன்ற தெய்வங்களை குறிப்பிடுகின்றன. உயர் குடியை சார்ந்தவர்களும், பொதுவான கோவில் அமைப்புகளை உடையனவாகவும், புராண வரலாறு உடையனவாகவும் உள்ளது. இவை பலியிடலை விரும்பாதவையாகவும் மேலும் மரக்கறிகளை படையலாக ஏற்பவையாகவும் உள்ளது.

திருமுருகாற்றுப்படையில் முருகன் அறுபடைவீடு முதலான குறிப்புகள் காணமுடிகிறது.

தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி
மணிமிடற் றண்ணல் -(பரி.9)

சிறுதெய்வம் விளக்கம்

சிறுதெய்வங்கள் பாமரமக்களின் வாழ்வில் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. பண்டைய மரபு காரணமாகவும், சில நன்மைகளின் காரணமாகவும் சிறுதெய்வங்கள் நாட்டுப்புற மக்களால் வணங்கப்படுகின்றன.

பெருந்தெய்வ வழிபாடு மிகுதியான இடங்களில் பரவி செல்வாக்குப் பெற்றிருந்தாலும் சிறுதெய்வ வழிபாடு மக்களிடம் சிறப்புப் பெற்று இன்றும் வழக்கில் உள்ளது.

ஐயனார். முனியன், வீரன், கருப்பசாமி மாரியம்மன், காளியம்மன், பிடாரி, அங்காளம்மன் வணங்கப்படுகின்றன. சிறுதெய்வ வழிபாடு என்பது நாட்டார் தெய்வங்களை வழிபடும் முறையாய் வழிபாட்டிற்குக் காரணம் அச்சமும் அன்பும்.

கலைக்களஞ்சியம் கூறுவது போன்று ஆதிகுடிகள் இயற்கையில் காணும் தீ. இடி பெருமழை பூகம்பம் போன்ற அச்சந்தரும் நிகழ்ச்சிகளுக்கும் நோய்களும் காரணம் உலகின்கண் உலவும் கணக்கற்ற ஆவிகளே என்று நம்பியிருந்தனர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாகக் கொண்டு வழிபட்டனர் சிறு தெய்வ வழிபாடு இட்டவட்டமான வரையறை இல்லை . கிராமம் காடு மலைப் பகுதிகளில் மிகுதியாக வணங்கப்படுவன, இவை பெரும்பாலும் குடும்பம், குலம், இனம், கிராமத்திற்கென்று தனித்தனிக் கோயில்கள் உண்டு. சிறுதெய்வங்களுக்கு உயிர் பலிக் கொடுத்தல் வழக்கத்தில் இருந்து வருகிறது. சிறுதெய்வங்களுக்கு பிறப்பும், இறப்பும் உடையவையாக செவி வழிச் செய்திகளும், நாட்டுப்புறப்பாடல்களும் காணப்படுகின்றன.

இயற்கையைக் கடவுளாக வழிபடுதல்

இயற்கையின் ஆற்றலைக்கண்டு அஞ்சிய மனிதன் வழிபடுவதன் மூலம் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதன் அடிப்படையில் நான் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன பண்டிகைகளும் பலிகளும் ஆற்றுவதன் மூலம் இயற்கையினை வயப்படுத்திடலாம் என்ற எண்ணத்தில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தோன்றின. உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு அவர்கள் இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்று கூறுகின்றனர்."

"ஊர்த் தெய்வங்கள்

இனத் தெய்வங்கள்

குலத் தெய்வங்கள்

மாலைத் தெய்வங்கள்

சமாதித் தெய்வங்கள்

நுணைத் தெய்வங்கள்ழூழூ

என ஆறுவகையாகப் பகுக்கிறார் டாக்டர் துளசி இராமசாமி

வேலூரிலுள்ள முனீஸ்வரன் கோயிலில் நோய் தீர்ந்தவர்களைப் பச்சை ஓலைப் பாடையில் ஏற்றிக் கோயிலைச் சுற்றி இழுத்து வந்து செடல் குத்தி வேண்டுதலை நிறைவேற்றுவர்.

மழை பொதுமக்கள் யாவருக்கும் இன்றியமையாத தேவைகளில் தலையாது எனினும் வேளாண்தொழிலுக்கு இதுவே மூலமாதலின் வேளாண்மைத் தொழில் புரிவோரே இவ்வாறு வழிபாட்டில் ஈடுபடுகின்றனர் மழை பொய்க்குமானால் அம்மன் ஆலயத்தின் முன் 'கெங்கையம்மன் கூத்து

நடத்துதல் இன்றைக்கும் வழக்கிலுண்டு

உருவ அமைப்பு

சிறுதெய்வங்கள் பலவற்றிற்கும் வழிபாட்டின் போது மட்டுமே புதிதாக உருவ வடிவங்கள் செய்யப்படுகின்றன. வழிபாடு முடிந்த நிலையில் அவற்றைச் சிதைத்துவிடும் வழக்கம் பல சிறுதெய்வக் கோயில்களில் காணப்படுகின்றது.

அம்மன் கோயில்களில் சக்திக்கரகமே தெய்வ உருவமாகக் கருதி வழிபடப்படுகிறது. சிறு தெய்வங்களின் பெயரை மட்டுமே நினைவில் கொள்ள முடியுமே தவிர அந்தத் தெய்வங்களுக்கான உருவங்களைக் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது. அதையும் தாண்டி சிறுதெய்வங்களுக்குச் சிலையெடுக்கப்பட்டிருந்தால் அவை பிரமாண்டமான உருவங்களைக் கொண்டிருக்கும் திறந்த வெளியில் குதிரையும் குதிரையின் மீது அமர்ந்திருக்கும் தெய்வமும் தனித்து நின்றோ, அமர்ந்தோ இருக்கும்.இவற்றை இன்றளவும் பல கோயிலகளில் காண முடிகிறது.

தல வரலாறு:

மதுரை மாநகரில் வீற்றிருந்த மகாகாளி தொட்டியத்திலிருந்து பறை இசைக்க சென்ற இருவரின் இசையில் மயங்கி தொட்டியம் சங்கம் புதரில் வந்து அமர்ந்தாள் அப்போது எசங்கராயண் பட்டியில் இருந்த மாடுகள் மேய்ந்து விட்டு பால் கொடுக்கும் நேரத்தில் சங்கம் புதருக்கு சென்று அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்யப்பட்டது இதனை அறியாத ஊர் மக்கள் மாட்டில் பால் கறந்தால் பால் வருவதில்லை எனவே சங்கம் புதரில் உள்ளவர்கள் விடுகிறார்கள் முறையிட்டனர். யாரோ பாலை கறந்து இசங்கராயஅரசனிடம் அரசன் தன் படை வீரர்களுடன் சங்கம் புதர் சென்று கள்வனை தேடினார் அரசன் புதருக்குள் வாழை சொருகினான் ரத்தம் பீறிட்டது சற்று நேரத்தில் புதரிலிருந்து உடனே மன்னன் அதிர்ந்து போனான். அவன் முன் ஸ்ரீ மதுரைகாளியம்மன் தோன்றினாள் (இன்றும் கருவறையில் உள்ள மதுரைகாளியம்மன் மேனியில் இக்காயத்தின் வடு உள்ளது). மனம் உருகி மன்னிக்கும்படி வேண்டி தாயே

உனக்கு என்ன வேண்டும் ? ஏன் இப்படி அமர்ந்து இருக்கிறாய் ? என்று மன்னன் கேட்டான்.

மதுரைகாளியம்மன் அரசனுடைய பட்டியில் ஒரு மாட்டை காட்டி இந்த மாடு எங்கெல்லாம் சென்று சுற்றி வருகிறதோ? அதெல்லாம் எனக்கு சொந்தம் , அதுவே எனது எல்லை என்று மதுரைகாளியம்மன் கூறினாள். மாடு பதினெட்டு பட்டி கிராமம் சுற்றி வந்து புதரில் நின்றது. 18 பட்டி மக்களும் என் பிள்ளைகள் என் அருள்பெற ஒரு அழகான கோவிலை அமைத்து என்னை வழிபட வகை செய்வாயாக என்று கூறி ஸ்ரீ மதுரைகாளியம்மன் மறைந்தாள். அம்மனின் வாக்கை கனிவுடன் ஏற்ற அரசன் உடனே “ தொட்டியம் ஸ்ரீ மதுரைகாளியம்மன் திருக்கோவிலை " கட்டினார்.

கோவிலின் மூன்று நிலை ராஜகோபுரத்தை வணங்கி உள்ளே சென்றால், விநாயகர், அழகு நாச்சியம்மன், மாரியம்மன் ,மதுரை வீரன் , கருப்பண்ணசாமி, காத்தவராயன் சன்னிதிகள் உள்ளன. கருவறையில் அன்னை தொட்டியம் மதுரகாளியம்மன் ஒய்யாரமாக வலது காலை குத்துக்காலிட்டு இடதுகாலை தொங்க விட்ட நிலையில் வலது கரத்தில் திரிசூலம் ஏந்தி அழகிய எழிற்கோலத்தில் அருள்பாலிக்கிறாள். குதிரை மீது அமர்ந்த மன்னன் சங்கராயன் சிலை , மதுரை செல்லான்,தொட்டியம் சின்னான் சிலை சூழ கருவறை அமைந்துள்ளது.

தலச்சிறப்பு:

மதுரை காளியம்மன் கோவில் பங்குனித் " தேர்த் திருவிழா காப்புகட்டுதல் மற்றும் பூச்சொரிதலுடன் தொடங்கும் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் திருவிழாவை முன்னிட்டு அம்மன் கோவில் ( உட்பிரகாரம், அம்மன் சன்னதி மட்டும் ) ஒருவாரம் அடைக்கப்பட்டிருக்கும் அப்படி அடைக்கப்படும் அம்மன் கருவறையில் இரண்டு பெரிய பானைகளில் நெய் ஊற்றி எட்டு வேட்டியால் ஆன இரண்டு பெரிய திரிகள் தயாரிக்கப்பட்ட விளக்கு ஏற்றப்படும் . இதை தொடர்ந்து அடைத்த கோயிலுக்கு ஆயிரம் பானைகளில் பொங்கல் வைத்து, மதுரை காளியம்மன் கோயிலுக்கு முன்பு பூஜை செய்து வழிபாடு நடத்தப்பட்டது முக்கிய நிகழ்ச்சியான சுமார் முப்பதடி உயரம் உள்ள ஓலை பிடாரி அம்மன், சுமார் இருபத்து ஒன்பது அடி உயரமுள்ள சின்ன தேர் மதுரைகாளியம்மன் திருத்தேர் தலை அலங்காரமும் அதன் பின் இரண்டு தேர்தூக்கும் நிகழ்ச்சி மூலம் அம்மன் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றாள்.

தமிழகத்திலேயே தோளால் தூக்கிச் செல்லப்படும் மிக உயரமான தேர் இதுவாகத் தான் இருக்கும் . இரண்டு தேரும் ஒரே நேரத்தில் வீதிவலம் வருவதால் சுமார் 300 பேர் ஒவ்வொரு தேரையும் சுமந்து செல்கின்றனர் இவ்விரு தேர்களையும் பக்தர்கள் தங்கள் தலையிலும், தோளிலும் சுமந்து திருவீதி உலா வருவார்கள்.

இந்த இரு தேர்களையும் தூக்குவதற்காகவே கவுத்தரசநல்லூர் கிளிஞ்சநத்தம் பாலசமுத்திரம் , சித்தூர் , அரங்கூர் , அயினப்பட்டி, தொட்டியம் , ஏரிகுளம் கோட்டமேடு , சந்தப்பேட்டை, கொசவம்பட்டி, கமலாபுரம்புதர் , தோளூர்பட்டி, ஏலூர்பட்டி, குண்டுமணிப்பட்டி, மாராச்சிப்பட்டி, உடையாளம்புத்தூர், நத்தம் , புத்தூர், கார்த்திகைப்பட்டி என 18 பட்டி கிராம மக்கள் திருவிழாவில் ஒன்று கூடுகின்றனர். சிறிய தேரில் மதுர காளி அம்மனும் பெரிய தேரில் ஓலைப்பிடாரிகளும் எழுந்தருளி வீதிகளில் வலம் வருபவர்,

இத்தலத்தில் ஆண்டு தோறும் "ஆனித் திருமஞ்சனவிழா" வெகு நடைபெறும் விமர்சையாக திருமஞ்சனவிழாவின் போது பக்தர்கள் தொட்டியம் காவிரி ஆற்றில் இருந்து பால்குடம்இ தீர்த்தக்குடம்இ சந்தனக்குடம்இ அக்னி சட்டி எடுத்து அலகு குத்தி மதுரைகாளியம்மனுக்கு தங்கள் வேண்டுதலை நிறைவேற்றுவர்

தேர்த் திருவிழா:

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் கடைசி செவ்வாய் அன்று திருவிழா தொடங்கி சித்திரை மாதம் முதல் செவ்வாய் வரை விழா நடைபெறும். இதில் பங்குனி முதல் செவ்வாய் அன்று பூச்சொரிதல் நிகழ்ச்சியும்இ 2 -ம் தேதி செவ்வாய் அன்று காப்புகட்டுதல் நிகழ்ச்சியும் நடைபெற்றுஇ அன்று இரவு முதல் அடுத்த செவ்வாய் காலை வரை தொடர்ந்து 8 நாட்கள் ஆலய நடை அடைக்கப்படும் காப்பு கட்டி நடை சாத்தப்பட்ட மறுநாள் ஆயிரம் பானையில் பொங்கல் வைத்து பூஜை நடைபெறும்.

பங்குனி 3 -ம் செவ்வாய் அன்று நடை திறக்கப்பட்டு தொடர்ந்து 8 மணி நேரம் இரவு, பகலாக நடை திறந்திருக்கும் திருத்தேர் தலையலங்காரம் இரவு முழுவதும் நடைபெற்றுஇ 30 அடி தேரில் ஓலை பிடாரி அம்மனும் 29 அடி தேரில் மதுரைக் காளியம்மனும் எழுந்தருள்வார்கள் இவ்விரு தேர்களையும் பக்தர்கள் தங்கள் தலையிலும் சுமந்து திருவீதி உலா வருவார்கள். தோளிலும்

பிரார்த்தனை:

அம்மனுக்கு தொடர்ந்து 9 அமாவாசை நாட்களில் சந்தனாதி தைலம் அபிஷேகித்துஇஎலுமிச்சை பழம் தீபமேற்றி 9 உதிரி எலுமிச்சை பழங்களை சமர்ப்பித்து வழிபட்டு வந்தால் வியாபாரத்தில் மிகுந்த லாபம்இ திருமண யோகம்இ கல்வியில் சிறப்பு உள்ளிட்ட சகல நற்பேறுகளும் கிட்டும். தல மரமான வன்னி மரத்தில் அமாவாசை நாளில் தொட்டில் கட்டி தொடர்ந்து 11 அமாவாசை நாட்களில் அம்மனுக்கு நெய் தீபம் ஏற்றி வணங்கி வந்தால் குழந்தைப்பேறு கிடைக்கும் காளியம்மனுக்கு காவேரி நீரால் அபிஷேகம் செய்வது விசேஷம்.

முடிவுரை:

நாட்டுப்புறத் தெய்வங்கள் மக்கள் பண்பாட்டோடு ஒட்டி உறவாடுபவையாகவும், மக்களின் வாழ்வியலின் அங்கமாக இருப்பவையாகவும் குறிப்பிட்ட வட்டாரத்தை தெரிந்துகொள்ளவோ, அவ்வட்டார மக்களை இனங்கானவோ அடையாளமாக இருப்பவை நாட்டுப்புறத் தெய்வங்களேயாகும்.

இயற்கையையம், ஊரின் நன்மைக்காக உயிர் விட்டவர்களையும், பயத்தின் காரணமாகவும், அவர்கள் வழிப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு உருவ அமைப்பு கொடுத்து அவர்களை வழிபட்டு வருகின்றனர். இது தமிழர் கலாச்சாரங்களை இன்றளவும் பாதுகாத்து வைக்க உதவுகிறது.

பார்வை நூல்:

அண்ணாமலை மு நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம், மருதலையான் பதிப்பகம், சென்னை.

இராமநாதன் ஆறு.இ. தமிழர் வழிபாட்டு மரபுகள் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு ஆய்வு, மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு, சிதம்பரம்.

துளசி.இராமசாமி. நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ. அஞ்சல். துரமணி, சென்னை-02